CBI told to probe ED charges against ex-IHFL promoter

BHAVINI MISHRA
New Delhi, 18 August

The Supreme Court (SC) on Tuesday directed the Central Bureau of Investigation (CBI) to examine all six allegations of financial irregularities levelled by the Enforcement Directorate against Sameer Gehlaut, former chairperson of Indiabulls Housing Finance (IHFL), and five corporate groups.

A Bench, headed by Chief Justice of India Surya Kant, also directed the Delhi Police's Economic Offences Wing (EOW) and the CBI to place fresh investigation status reports before it. Five of the six allegations had previously been examined by the EOW. The sixth concerns a transaction of around ₹1,574 crore, for which the CBI has sought permission from the Special Court under the Prevention of Money Laundering Act (PMLA), Mumbai, to conduct a further probe.

The SC directed the Special Judge to decide the CBI's application within two weeks. The directions came against the backdrop of the court's repeated criticism of investigating agencies for failing to make meaningful progress in the case. At an earlier hearing, the Bench had questioned what the CBI had done between January and July and expressed concern that the agencies had failed to keep the court informed about the probe.

The court had then described the conduct of the CBI and EOW as "highly questionable" and warned that it could summon the heads of the two agencies over their failure to file status reports. The Bench refrained from doing so after Additional Solicitor General S V Raju assured it that the agencies would take necessary steps and submit their reports.

The case stems from a petition filed by Citizens Whistle Blower Forum seeking a court-monitored Special Investigation Team probe into allegations including diversion and round-tripping of funds, corporate irregularities and violations of company law involving Indiabulls, its promoter and associated entities.

Not an accused in PIL-linked probe: Sammaan Capital

Sammaan Capital on Tuesday said it was not an accused in any investigation arising from allegations made in a public interest litigation (PIL) concerning its erstwhile promoter Sameer Gehlaut.

In a stock exchange filing, it said the Economic Offences Wing of the Delhi Police, in a status report filed on August 11, stated that Sammaan Capital had received back all money related to loans extended to five borrower groups named in the PIL.

"The Central Bureau of Investigation has been asked to probe allegations against the erstwhile promoter. Sammaan Capital is not an accused but a 'victim'," the company's advocate Nalin Kohli said after the hearing.

ANUPREKSHA JAIN

SC rejects plea seeking ban on execution by hanging

The Supreme Court (SC) on Tuesday dismissed a plea seeking abolition of the practice of executing a death row convict by hanging and replacing it with methods such as intravenous lethal injection. It said the material placed before it does not establish that lethal injection has any added advantage over hanging as a mode of execution.

The Bench said it was not persuaded that a case was made out for referring a 1983 decision to a larger Bench for reconsideration of the validity of Section 354(5) of the Code of Criminal Procedure. PTI

Three-member panel to be set up to probe police excesses during CJP stir

BHAVINI MISHRA
New Delhi, 18 August



The Supreme Court (SC) on Tuesday said it would constitute a three-member panel to independently examine allegations arising from the Cockroach Janta Party (CJP) protests, including claims of excessive police force and violence against law enforcement personnel.

The proposed panel will comprise a former SC judge, a former chief justice of a High Court, and a senior retired police officer. A Bench headed by Chief Justice of India Justice Surya Kant said the panel would undertake a fact-finding exercise and submit reports periodically.

The court said victims would be given a chance to approach the committee and assured that necessary logistical support would be made available to it. Its findings and recommendations would be considered by the Court while deciding further action.

The panel will also examine allegations of sexual assault and online harassment targeting women protesters, besides claims of social-media-based harassment or victimisation of vulnerable individuals.

Centre, states get notice to seize property of offenders

The Supreme Court on Tuesday sought responses from the Centre and the state governments on a plea filed by advocate Ashwini Kumar Upadhyay seeking directions to confiscate movable and immovable property of offenders and their family members involved in question paper leak cases.

PM CARES saw 30% drop in domestic donations in FY25

PRESS TRUST OF INDIA
New Delhi, 18 August

Domestic donations to the PM CARES Fund fell by 30 per cent to nearly ₹479 crore during the financial year 2024-2025 while foreign donations also declined by 18 per cent to ₹92.8 lakh, according to its latest audit report.

The total balance in PM CARES Fund stood at ₹8,452 crore as on March 31, 2025, up from ₹7,173 crore a year ago. Of this, ₹7,846 crore was parked in fixed deposits and ₹605 crore in savings bank accounts, the report said. The domestic donations received by the PM CARES in FY24 stood at ₹681.8 crore, while it had got foreign donations totalling ₹1.13 crore. The fund spent ₹87.8 lakh on PM CARES for Children Scheme during FY25, sharply down from ₹15.37 crore in FY24.

THE FUND SPENT JUST ₹87.8 LAKH FOR ITS CHILDREN'S SCHEME IN FY25, DOWN FROM ₹15.37 CRORE IN FY24

Total payments made during FY25 was ₹87.85 lakh, as against ₹15.6 crore in FY24.

A study of the audited statements on the PM's Citizen Assistance and Relief in Emergency Situations (PM CARES) Fund website shows that the voluntary domestic contribution peaked at ₹7,184 crore in FY21 and then fell to ₹1,896 crore in FY22, before declining further to ₹909 crore in FY23.

Foreign contribution has seen a sharper decline, registering a high of ₹495 crore in FY21, before falling to ₹40 crore and ₹2.57 crore in the next two years. The foreign contribution now stands at ₹92.8 lakh, the second lowest since ₹39.7 lakh in the first year of FY20.

The government set up the PM CARES Fund with the primary objective of dealing with any kind of emergency or distress situation, like the one posed by the Covid pandemic, and to provide relief to the affected. It was registered as a public charitable trust.

The PM is the ex-officio chairman of the fund that consists entirely of voluntary contributions and does not get any budgetary support. The fund has been used over the years to boost emergency care.

Su-30MKI parts among ₹3K cr defence items to be indigenised

BHASWAR KUMAR
New Delhi, 18 August

The Department of Defence Production (DDP), under the Ministry of Defence (MoD), notified the 6th Positive Indigenisation List (PIL) on Tuesday. This latest list adds defence equipment with an estimated business potential of ₹3,070 crore to the category of items banned from import after a specified date.

The list comprises 405 "strategically important items" — 16 of the Indian Coast Guard (ICG) and 389 of defence public sector undertakings (DPSUs) — including line replaceable units, subsystems, sub-assemblies, spares, components, and raw materials, according to an MoD release.

These items are used across a broad range of defence platforms and systems, which, according to the release, include the indigenous Advanced Light Helicopter, Light Utility Helicopter and Light Combat Aircraft; the Su-30MKI combat aircraft and AL-31FP engine; armoured platforms such as the T-72, T-90 and BMP-II; warships; missile systems such as Konkurs-M, Invar and MRSAM; defence electronics, including radars, sonars, fire control systems and satellite communication systems; and high explosive anti-tank ammunition and other critical defence equipment.

"Each item has an indicative timeline for indigenisation. Upon successful indigenous development, these items will be procured from the Indian industry. The DPSUs and ICG will undertake indigenisation through various routes, including their 'Make' procedure and in-house development, with participation from the industry, particularly MSMEs," said the release.

More than 15,700 defence items have been successfully indigenised to date, resulting in an estimated import substitution value of about ₹9,000 crore over the last five years, said the release.

ACCENT REGION

UTTAR PRADESH

State gets fresh push with 2K acres industrial township

VIRENDRA SINGH RAWAT
Lucknow, 18 August

The Gorakhpur Industrial Development Authority (GIDA), in a bid to strengthen the industrial ecosystem, has amassed a fresh land bank of 2,000-acres in the Gorakhpur district — an emerging industrial gateway in Eastern UP and pocket borough of Uttar Pradesh Chief Minister Yogi Adityanath.

The new swathes are being developed as the Dhuriapar industrial township, which is located between the Purvanchal Expressway and the Gorakhpur Link Expressway, for a seamless logistics.

Around 115 acres have already been allotted to companies, including Adani and Shreyas Distilleries, signalling strong investor interest in the township. The 2,000 acre land bank is in addition to the 3,600 acres of industrial area already amassed by GIDA, which is inching saturation. Since 2017, the authority has garnered ₹20,000 crore in investments, generating 40,000 job opportunities, GIDA CEO Anuj Malik said.

Over 50,000 people are working in various technical, skilled, and semi-skilled roles across industries operating in the authority's area, she added. Malik also said the growing industrial base is creating opportunities for local talent.

RAJASTHAN

Artisans to get market access boost

ANIL SHARMA
Jaipur, 18 August

The Rajasthan government has initiated operations of its major *haats* (craft bazaars) under a public-private partnership (PPP) model, according to Shikhar Agarwal, additional chief secretary of Industries and Commerce. The move aims to secure fair prices and direct markets for artisans, weavers, women self-help groups, and small entrepreneurs.

Agarwal said the government is looking to develop these haats into modern markets and marketing platforms, rather than limiting artisans, weavers, and small entrepreneurs to mere sales centres.

He mentioned that the process to operate four major state *haats* has begun in compliance with the announcement by the Chief Minister Bhajanlal Sharma on June 27, 2026, on the occasion of International MSME Day. "Accordingly, a request for proposal has been issued through the Institute of Entrepreneurship Development. The procedure for operating the *haats* will be completed soon," he said.

சட்டசபையிலிருந்து அண்ணா தி.மு.க. வெளிநடப்பு

சவுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட மீனவர் உடலை மீட்க நடவடிக்கை எடுக்கவில்லை

எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

சென்னை, ஆக. 19–

சவுதியில் சுட்க் கொல்லப்பட்ட மீனவர் உடலை மீட்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

சட்டசபையில் இன்று முதலமைச்சர் விஜய், 110 விதியின் கீழ் பால் கொள்முதல் விலை உயர்வு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கார் வழங்கப்படும் உள்ளிட்ட 3 அறிவிப்புகளை வெளியிட்டார். முதலமைச்சரின் அறிவிப்புக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டனர். அதைத் தொடர்ந்து சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர், நீர்வளத்துறை மானிய கோரிக்கை மீது பேச அமைச்சர் ஆனந்த்தை அழைத்தார்.

அப்போது அண்ணா தி.மு.க. உறுப்பினர் ஓ.எஸ். மணியன் எழுந்து கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது பேச அனுமதி வழங்க வேண்டும் என்று சபாநாயகரிடம் கேட்டார். நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பு தீர்மானம் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதற்கான தீர்வு கிடைத்தவுடன் அந்த தீர்மானம் சபையில் எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறினார்.

சபாநாயகர் கூறியதை ஏற்றுக் கொள்ளாமல் அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று அனுமதி வழங்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். அப்போது அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி எழுந்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை, உயிர் பிரச்சனை அதனால் அந்த கவன ஈர்ப்பு தீர்மானம் குறித்து பேச அனுமதிக்க வேண்டும் என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து அண்ணா தி.மு.க. அனைவரும் எழுந்து நின்று அனுமதி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இந்த தீர்மானம் குறித்த பதில் கிடைத்தவுடன் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படும், இப்போது அது குறித்து பேச அனுமதிக்க முடியாது என்று கூறி, நீர்வளத்துறை அமைச்சரை மானிய கோரிக்கை குறித்து பேச அழைப்பு விடுத்தார். அண்ணா தி.மு.க.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அண்ணா தி.மு.க.வினர் வெளிநடப்பு செய்தனர்.

இதைதொடர்ந்து, எடப்பாடி பழனிசாமி சட்டசபை வளாகத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

சட்டமன்றத்தில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்து 5 நாட்களான பின்னும் விவாதத்திற்கு ஏற்க மறுக்கின்றனர். தமிழகத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் சவுதி அரோபியா கடல்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது ஈரான் கடல் கொள்ளையார்களால் தாக்கப்பட்டனர். இதில் மயிலாடுதுறையைச் சேர்ந்த மாரிமுத்து என்று மீனவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மேலும் 3 மீனவர்கள் படுகாயம் அடைந்து சவுதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சவுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர் உடல் தாயகம் கொண்டு வருவது தொடர்பாக கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்துள்ளோம். இன்று வரை அதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. தமிழர்களை காப்போம் என்று சொல்லும் தவெக அரசு சவுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட மீனவர் உடலை மீட்க நடவடிக்கை எடுக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் மனநிலையை தவெக அரசு துளியும் புரிந்து கொள்ளவில்லை, ஏனென்றால் இங்கு தவெக அரசு என்ற ஒன்று நடக்கவே இல்லை. இவர்களை தமிழர்களின் நலனை காக் போகிறார்கள்? எவ்வளவு துயரமான விஷயம் இது, இதை பற்றிய கவன ஈர்ப்பு தீர்மானத்தை விவாதத்திற்கு எடுக்காமல் காலம் தாழ்த்துகிறார்கள் என்று கடுமையாக சாடினார்.

இது போன்ற அவசர விவகாரங்கள் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் பேரவையில் கொண்டு வந்தால் அது திமுக, அதிமுக நாங்கள் யார் ஆட்சியில் இருந்த போதும் உடனடியாக பேரவையில் இது குறித்து பேசி உரிய நடவடிக்கை எடுப்போம். ஆனால் இவர்களோ! என்ன சொல்வது இவர்களை. எந்த வேகத்தில் ஆட்சிக்கு வந்தார்களோ, அதே வேகத்தில் அதலபாதாளத்திற்கு இவர்கள் செல்வார்கள் என்று சாடினார். கடற்கொள்ளையர்களால் சுடப்பட்டு உயிரிழந்த மீனவர் உடலை மீட்டு வரும் கடமையை தட்டிக்கழிக்கிறது தவெக அரசு. குறிப்பிட்ட மீனவர் உயிரிழப்பு குறித்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் பேரவையில் பேசும் போது, தவெக எம்எல்ஏ க்கள் கைத்தட்டி சிரிக்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

தி.மு.க. ஆட்சியில் ரூ. 14 கோடியில் கட்டப்பட்ட பாலம் 3 மாதத்தில் இடிந்தது எப்படி?

நிதி அமைச்சர் மரிய வில்சன் கேள்வி

சென்னை, ஆக. 19–

தி.மு.க. ஆட்சியில் ரூ. 14 கோடியில் கட்டப்பட்ட பாலம் 3 மாதத்தில் இடிந்தது எப்படி? என்று நிதி அமைச்சர் மரிய வில்சன் கேள்வி எழுப்பினார்.

சட்டசபையில் இன்று நீர்வளத்துறை மானியக் கோரிக்கையின் விவாதத்தின் போது தி.மு.க. உறுப்பினர் ஐ.பெரியசாமி பேசினார். அவர் பேசுகையில் த.வெ.க. அரசு மீது குற்றச்சாட்டுகளை வைத்த போது அதற்கு அமைச்சர்கள் உடனுக்கு உடன் பதில் அளித்தனர். அதுபோல் ஐ.பெரியசாமி பேசும் போது, அமைச்சர் வினோத் குறுக்கிட்டு பேசுகையில், "திமுக ஆட்சியில் கட்டப்பட்ட ஒவ்வொரு வீடும் உடைந்து தொங்குகிறது. கம்பி தெரிகிறது மறுசீரமைப்பு பணிக்காகவே 50 முதல் 55 ஆயிரம் தேவைப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்" என்றார்.

அப்போது குறுக்கிட்ட முன்னாள் அமைச்சர் நேரு, "கடந்த காலங்களில் கட்டபட்ட வீடுகள் எல்லாம் பழுதுபட்டுள்ளது. சரியாக பழுது பார்க்கவில்லை என்று சொன்னார்கள். இந்திரா காந்தி காலத்தில் இருந்து வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. 13 ஆயிரம் முதல் மூன்று லட்சம் வரையில் வீடுகள் கட்டப்பட்டு உள்ளது. இந்த வீடுகளில் பயனாளிகள் கூடுதலாக காசை போட்டு கட்டுகிறார்கள். இருப்பவர்கள் அதிகமாக காசை போட்டு கட்டுகிறார்கள். இல்லாதவர்கள் இருக்கும் காசை வைத்து கட்டுகிறார்கள். ஆனால் வீடுகளை பழுது பார்ப்பதற்காக திமுக ஆட்சியில் தான் நிதி ரூ. 50,000 ஒதுக்கப்பட்டது. பயனாளிகளின் சௌகரியத்திற்கு தான் வீடுகள் கட்டப்பட்டுள்ளது. நீங்களாவது ஐந்து லட்சத்தில் நல்ல முறையில் வீடுகளை கட்டுங்கள். நீங்கள் கட்டிய வீடுகளை நாங்கள் சரியில்லை என்று சொல்லாத அளவிற்கு கட்டுங்கள்" என்றார்.

அதற்கு வேளாண்மைத்துறை அமைச்சர் வினோத், "கடந்த ஐந்து ஆண்டுகளில் கட்டி கொடுத்த வீடுகள் இடிந்து தொங்குகிறது. அதை மக்களிடம் கேட்டால் தெரியும் . ஆனால் நமது முதலமைச்சர் ஆட்சியில் கட்டி கொடுக்கும் வீடுகள் இன்னொரு 50 ஆண்டுகளுக்கு தரமாக இருக்கும்" என்றார்.

மக்களுக்கு சேவை செய்யத்தான் வந்துள்ளோம்

அப்போது குறுக்கிட்ட அமைச்சர் என் ஆனந்த், "நீங்களாவது ஒழுங்கா கட்டுங்கள் என்று மூத்த உறுப்பினர் சொன்னார். நாங்கள் எது செய்தாலும் சரியாகத் தான் செய்வோம். ஐயோ கிய்யோ என்று பேசாதீர்கள். நீங்கள் ஒன்றை நல்லா தெரிந்து கொள்ளுங்கள், இனி நீங்கள் கனவு கண்டாலும் ஆட்சிக்கு வர முடியாது.

நாங்கள் அரசியல்வாதி அல்ல. மக்களுக்கு சேவை செய்யத்தான் வந்துள்ளோம். நீங்கள் அதை புரிந்து கொள்ளுங்கள். நாங்கள் வந்து 3 மாசம் தான் ஆச்சு. என் அன்னையை பார்த்துக் கொள், என் பிள்ளையை என் தம்பியை பார்த்துக் கொள் என்று மக்கள் சொல்கிறார்கள். நாங்கள் யாரும் தவறு செய்ய மாட்டோம். இதை திரும்பத் திரும்ப சொல்கிறோம். புரிகிறதா? உங்க இஷ்டத்துக்கு எதுவும் பேச வேண்டாம்" என்றார்.

அப்போது கே.என் நேரு, "அரசு அதிகாரிகள் மேற்பார்வையிடுவது மட்டும் தான் அவர்களது வேலை. அதே போன்று தான் அமைச்சர்களும் மேற்பார்வையிடுகிறார்கள். வீட்டை பயனாளிகள் தான் கட்டுகிறார்கள். அண்ணா திமுக ஆட்சியில் கட்டப்பட்ட வீடுகளில் இன்னும் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் புகைப்படம் உள்ளது. அதே போன்று திமுக ஆட்சியிலும் கலைஞரின் பெயர் அந்த இல்லத்தில் உள்ளது. எங்கள் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் தரமாகத்தான் உள்ளன. சொந்த வீடு கட்டும்போதே சில சங்கடங்கள் வருகிறது" என்றார்.

பாலம் இடிந்து சாதனை படைத்த எ.வ.வேலு

மேலும், திமுக உறுப்பினர் கோ.வி செழியன், "நாங்கள் அரசியல்வாதி அல்ல என்ற கருத்தை மீண்டும் மீண்டும் பதிவு செய்து வருகிறார் அமைச்சர் ஆனந்த். ஆனால் தவெக அரசியல் இயக்கமாக கட்சியாக தேர்தல் ஆணையத்தில் பதிவுசெய்து தான் தேர்தலை சந்தித்து ஆட்சிக்கு வந்துள்ளது என்பதை மறந்துவிட கூடாது. ஓராண்டுக்குள் கட்டப்பட்ட வீடுகள் சேதம் அடைந்தது என்று சொன்னது தவறு. 15 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட வீடுகளுக்கு பழுது பார்ப்பதற்கான நிதியை தந்ததுதான் திமுக" என்றார்.

அப்போது நிதி அமைச்சர் மரியவில்சன் எழுந்து, "திமுக ஆட்சியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மேம்பாலம் மூன்றே மாதத்தில் காலியான செய்தியை ஊரே பேசியது. இதன் மூலம் திமுக ஆட்சியில் முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சராக எ.வ வேலு சாதனை படைத்துள்ளார்" என்றார்.

இதற்கு பதிலளித்து முன்னாள் அமைச்சர் எ.வ வேலு பேசுகையில், "இந்த விவகாரம் குறித்து எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எடப்பாடி அப்போதே கேள்வி கேட்டு அதற்கான பதிலையும் நான் தெரிவித்து விட்டேன். அது அவைக் குறிப்பில் உள்ளது. கிராம சாலை திட்டத்தின் மூலம் கிராமப் பகுதியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே இந்த மேம்பாலம் கட்டப்பட்டது.

இதுவரை திருவண்ணாமலை மாவட்டத்திலேயே பெய்யாத அளவுக்கு பெரிய அளவிலான மழை பெய்ததன் காரணமாக அந்த மேம்பாலம் சேதம் அடைந்தது. இது இயற்கையின் சீற்றம். 54,600 கன அடி நீரை மட்டுமே தாங்கும் அளவில் தான் அந்த மேம்பாலம் கட்டப்பட்டது. ஆனால் மூன்று லட்சம் கன அடி நீர் வந்ததால் அந்த மேம்பாலம் சேதமடைந்தது" என்றார்.

பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசுகையில், "கடந்த ஐந்து ஆண்டுகளில் பொதுப்பணித்துறை சார்பில் வெளியிடப்பட்ட நிதி குறித்து ஒவ்வொரு ரூபாய்க்கும் வெள்ளை அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அப்போது பாலத்தின் நிலவரம் குறித்து தெளிவாக பதில் அளிக்கப்படும். சோழர் காலத்தில் கட்டப்பட்ட கல்லணை அணை இன்னமும் கம்பீரமாக இருக்கிறது என்றார்.

தமிழ்நாட்டின் நீர்நிலைகளை சீரமைக்க அரசு முன் வரவேண்டும்: சௌமியா அன்புமணி கோரிக்கை

சென்னை, ஆக. 19–

தமிழ்நாட்டில் நீர்நிலைகளை சீரமைக்க அரசு முன் வரவேண்டும் என்று சௌமியா அன்புமணி கோரிக்கை விடுத்தார்.

சட்டப் பேரவையில் இன்று மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பாமக எம்எல்ஏ சௌமியா அன்புமணி பேசினார்.

அவர் பேசியதாவது:

பொதுவாக ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் பங்காளி சண்டைகள் எல்லாம் போட்டு அந்த நிலத்தை தக்க வைத்துக் கொள்ள வழி செய்வார்கள். பரம்பரை சொத்தை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். அதே போன்று நீர் வளம் என்ற ஒரு மிகப்பெரிய சொத்து. அது நம் கையை விட்டு போய்க் கொண்டிருக்கிறது. நீர் வளத்தை தக்க வைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நெய்வேலியில் இருக்கும் தன்னூத்து உலகின் இரண்டாவது அதிசயம். ஆனால் நெய்வேலி சுரங்க மூலம் ராட்சத குழாய்கள் போட்டு நீரை உறிஞ்சி விட்டார்கள். இந்தியாவிலேயே சதுப்பு நிலம் சென்னை பள்ளிக்கரணைகளில் 15 ஆயிரம் ஏக்கர் உள்ளது. மிச்சம் இருக்கும் 2500 ஏக்கரில், பல வகையான பறவைகள் இன்றும் உள்ளன. சென்னையில் ஓடும் கூவம் ஆறு மிகப்பெரிய அதிசயம். 75 கிலோ மீட்டர் அந்த ஆறு ஓடுகிறது. கூவம் ஆற்றை சுத்தம் செய்தால் பத்தாது. கூவம் ஆற்றில் கொட்டும் குப்பைகளை தடுத்து நிறுத்த வேண்டும்.

நல்ல தண்ணீரில் சாக்கடை கலப்பது மிகப்பெரிய குற்றம். ஆனால் அனைத்து நகராட்சிகளிலும் அது நடைபெற்று வருகிறது. தாமிரபரணி மற்றும் நொய்யல் ஆறுகளில் குப்பை தேங்கி உள்ளது. அங்கு கொட்டும் குப்பைகளை தடுக்க வேண்டும். தாங்கள், கரணை, பாக்கம் என்ற வார்த்தைகளில் முடியும் அனைத்து ஊர்களும் தண்ணீர் சார்ந்த ஊர். வள்ளுவர் கோட்டம் நேரு ஸ்டேடியம் கோயம்பேடு பேருந்து ஆகியவை எல்லாம் ஏரியில் தான் உள்ளன. ஏரிகளில் தான் அரசு அலுவலகங்கள் உள்ளது. நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டும். எங்கு நீர்நிலை இருந்தாலும் டிஜிட்டல் மேப்பிங் செய்து நோட்டீஸ் செய்ய வேண்டும்.

"மேட்டூர் உபரிநீர் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும். நொய்யல் ஆற்றில் கழிவுநீரை அகற்றும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். பாலாற்றில் தடுப்பணை கட்ட வேண்டும். காவிரி முதல் குண்டாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

அத்திக்கடவு அவிநாசி திட்டம் இரண்டை நிறைவேற்ற வேண்டும். அரியலூர் சேலம் பாசன திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

தருமபுரி காவிரி உபரி நீர் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். ஏரையூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் ஆனந்த், "நீர் நிலைகளை கண்டறிந்து அதனை மேப்பிங் குறித்து வருவாய்த் துறை அமைச்சருடன் தெரிவித்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது" என்றார்.

திருத்தப்பட்ட மேகதாது அணை திட்ட அறிக்கை: மத்திய நீர் ஆணையத்திடம் கர்நாடகா அரசு தாக்கல்

பெங்களூரு, ஆக. 19–

திருத்தப்பட்ட மேகதாது அணை திட்ட அறிக்கையை மத்திய நீர் ஆணையத்திடம் கர்நாடகா அரசு சமர்ப்பித்துள்ளது.

காவிரியின் குறுக்கே மேகதாது அணை அமைக்கும் வேலைகளை கர்நாடக அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் நிலையில், தமிழக அரசு அவ்வப்போது உச்ச நீதிமன்றத்தை நாடி அந்த முயற்சிகளை தடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக மேகதாது அணை தொடர்பாக திட்ட அறிக்கையை தயாரிக்க கர்நாடகா அரசுக்கு தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துவிட்டது.

இதன் பிறகு மேகதாது அணை திட்ட அறிக்கையை மத்திய நீர் ஆணையத்திற்கு கர்நாடகா அரசு அனுப்பியது. பிறகு திருத்தம் செய்ய கோரி திட்ட அறிக்கையை மத்திய நீர் ஆணையம் திருப்பி அனுப்பிவிட்டது. இதன் பிறகு திட்ட அறிக்கையில் கர்நாடகா அரசு திருத்த நடவடிக்கையை மேற்கொண்டது.

தற்போது திருத்தப்பட்ட மேகதாது அணை திட்ட அறிக்கையை மத்திய நீர் ஆணையத்திடம் கர்நாடகா அரசு சமர்ப்பித்துள்ளது. இதன் வாயிலாக மாநில அரசு மேகதாது குடிநீர் மற்றும் மின்சாரத் திட்டத்தை மிக விரைவாகச் செயல்படுத்த மாநில அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்கிடையே நேற்று மாலை முதல்வர் சிவக்குமார் தலைமையில் நடந்த உயர்மட்ட ஆலோசனை கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் என். செல்லுவராயசாமி மற்றும் உயர் அதிகாரிகள், வனத்துறை செயலாளர் மற்றும் நீர்வளத்துறை செயலாளர் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

மாற்று நிலம் ஒதுக்கீடு...

இந்த கூட்டத்தில் மேகதாது அணை திட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதித்தனர். இத்திட்டத்திற்குத் தேவையான வனத்துறையின் அனுமதி பெறும் நடைமுறைகளைத் தாமதமின்றி நிறைவு செய்ய இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அணை கட்டும் பகுதியில் அகற்றப்பட வேண்டிய மரங்கள் தொடர்பாக விதிகளைப் பின்பற்றி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், மாற்று நிலம் ஒதுக்கீடு மற்றும் விதிமுறைகளின்படி புதிய மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பதற்கான திட்டங்கள் ஆகியவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்த சூழலில் தான் விரிவான திட்ட அறிக்கை திருத்தப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது; நீர்வளத்துறை அமைச்சர் செல்லுவராயசாமி மற்றும் மாநில அரசு இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். வனத்துறை அனுமதியைப் பெறுவதற்கான அடுத்தகட்ட நடைமுறைகளை உடனடியாகத் தொடங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக நீர்வளத்துறை அமைச்சர் தெரிவித்தார். இதற்கிடையே தமிழக அரசு எத்தகைய முடிவு எடுக்கும் என்று விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

தி.மு.க.வுக்கு முதல்வர் விஜய் எச்சரிக்கை...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

தான் உள்ளது. இதற்கான காரணம் 3 லட்ச ரூபாய் ஒதுக்கப்படுவது மக்களுக்கு போதுமானதாக இல்லை. மக்கள் எப்படி எல்லாம் கஷ்டப்படுகிறார்கள் என்று முதல்வரின் கவனத்திற்கு வந்தவுடன் அதனை 5 லட்சம் ரூபாயாக உயர்த்தியுள்ளார். தற்போது 70,000 வீடுகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படவுள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் நான் நேரடியாக சென்று போய் பார்த்தேன். விடு கட்டும் பணிகள் பவுண்டேஷன் பணியில் மட்டுமே உள்ளது. குடிசை வீட்டில் தான் உள்ளார்கள்.

66,850 வீடுகளுக்கு மாவட்ட ஆட்சியர் சார்பில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதில் 17,116 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது. இந்த வீடுகளுக்கு கட்டுமானத்தின் நிலை அடிப்படையில் தொகை விடுவிக்கப்படும். அந்த வகையில் 375 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

கட்டுமான பொருட்களின் விலை

இதைத் தொடர்ந்து பேசிய ஐ.பெரியசாமி, கட்டுமான பொருட்களின் விலையை கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் பிரபு, கட்டுமானப் பொருட்களின் விலை கூடிவிட்டதாக கூறுகிறார்கள். கடந்த ஆண்டு தமிழக அரசில் பதிவான தகவல் இது. அதன்படி கடந்த ஆண்டு 13.22 கோடி மெட்ரிக் டன் ஜல்லி தயாரிக்கப்பட்டதாக தகவல் உள்ளது. ஆனால் பயன்படுத்தப்பட்டது 85 கோடி மெட்ரிக் டன். இது எங்கிருந்து வந்தது? அதன்படி 100 கோடி மெட்ரிக் டன் உற்பத்தி ஆகி உள்ளது. ஆக இப்படித்தான் விலையை உயர்த்தினீர்களா?" என்று பதில் கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து அமைச்சர் என்.ஆனந்த் பேசும்போது, "மலைப்பகுதியில் வசிப்பவர்களுக்கு திமுக ஆட்சியில் ரோடு போட்டதாக உறுப்பினர் கூறுகிறார். அண்ணனின் மாவட்டமான திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள தாண்டிக்குடி பஞ்சாயத்தில், கடந்த ஆண்டு முதலமைச்சர் விஜய் படப்பிடிப்புக்காக சென்றார். அங்கு படப்பிடிப்பு எடுப்பதற்காக கரடு முரடான பாதைகளில் ஜீப்பில் சென்றார். அப்போது அங்கிருந்தவர்கள் 15 ஆண்டுகளாக சாலை வசதி இல்லை என்றார்கள். அப்போது நமது சொந்த செலவில் சாலை போட்டு விடலாமா என்று முதலமைச்சர் விஜய் என்னிடம் கேட்டார்.

நம்முடைய ஆட்சி கண்டிப்பாக வந்து விடும். அப்போது சாலை போட்டு விடலாம் என்று சொன்னேன். அதைக் கேட்ட முதல்வர் சிரித்தார். பின்னர் ஆட்சிக்கு வந்த ஐந்தாவது நாளில், முதலமைச்சர் உத்தரவுப்படி தாண்டிக்குடி பஞ்சாயத்து பகுதியில் ரோடு போட வேண்டும் என உத்தரவு வந்தது.

இதற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து வேலை செய்யப்பட்டு வருகிறது என்றார். திமுக எம்.எல்.ஏ. ஐ.பெரியசாமி மேலும் கூறுகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை குறித்து பல்வேறு கருத்துகளை தெரிவித்தார். அதற்கு அமைச்சர் என்.ஆனந்த் பதில்களை அளித்தார்.

ஆதாரம் இருக்கிறதா?

அதைத் தொடர்ந்து ஐ.பெரியசாமி பேசத் தொடங்கினார். அப்போது தவெக – திமுக உறுப்பினர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது திமுக ஆட்சியில் ஊழல் செய்ததாக கூறுவதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்கள் கேள்வி எழுப்பினர்.

அப்போது அமைச்சர் ராஜ்மோகன் எழுந்து, "என்ன பேசினாலும் ஆதாரம் காட்டுங்கள் ஆதாரம் காட்டுங்கள் என்று எதிர் தரப்பினர் சொல்கிறார்கள். ஆதாரங்களை நாங்கள் காண்பித்தால் தவறு நடந்திருப்பதாக எதிர் தரப்பினர் ஒப்புக்கொள்கிறார்கள். முதலமைச்சர் வைத்திருக்கும் ஆதாரத்தை காட்டினால் அவர்கள் நிலைமையை நினைத்துப் பார்த்தால் கொஞ்சம் கவலையாக தான் இருக்கிறது" என்றார்.

மூன்று துறைகளின் கோப்புகள் என் மேசையில் உள்ளது

அப்போது முதலமைச்சர் விஜய் எழுந்து பேசினார். அவர் பேசியதாவது:

எதிர்க்கட்சியினர் ஆதாரம் ஆதாரம் என்று கேட்கிறார்கள். கடந்த வாரம் நிதி அமைச்சர் பேரவையில் பேசும்போது மூன்று துறைகளின் ஆய்வு கோப்புகள் எனது மேசையில் இருப்பதாக தெரிவித்தார். அவர் போற போக்கில் சொல்லவில்லை. உண்மையிலேயே எனது மேசையில் அந்த கோப்புகள் உள்ளன. அதுவும் ஆதாரத்துடன் உள்ளது. அதை ஓபன் பண்ண வைத்து விடாதீர்கள். எதை எப்போ ஓபன் பண்ணனுமோ அது அப்போ கரெக்டா ஓபன் ஆகும்" என்றார்.

அமைச்சர் ரமேஷ் எழுந்து, "அனைவரும் பேசுங்கள் பேசுங்கள் என்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் பேச ஆரம்பித்தால் அவர்கள் ஆதாரத்தை காட்ட சொல்கிறார்கள். அதனை காட்ட ஆரம்பித்தால் என்ன நடக்கும்" என்றார்.

அப்போதும் குறுக்கிட்ட முதல்வர் ஜோசப் விஜய், மக்களிடம் எப்போது பேச வேண்டும்; என்ன பேசனும், எப்படி பேசனும் என்று பேசிவிட்டுதான் எங்களை அன்பாக, ஆசையாக இங்கே (சட்டசபைக்குள்) கொண்டு வந்து உட்கார வைத்துள்ளார்கள். நான் பேசுவேன்... பேசக்கூடாது என்றெல்லாம் இல்லை; இடைத்தேர்தலிலாவது சில பேருக்கு நல்லது நடக்கணும்ல.

இவ்வாறு அவர் கூறினார்.